RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-352 | 19 டிசம்பர் | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## தமிழைவிட வேறு எந்த மொழிக்கும் அதிக வரலாறு கிடையாது அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கருத்து

மதுரை, டிச.19

காலத்துக்கு ஏற்ப மொழி முன்னேற வேண்டும் என்று அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார். தகவல் தொழில்நுட்பத் துறையின் தமிழ் இணையக் கல்விக்கழகம் மற்றும் எத்திராஜ் மகளிர் கல்லூரி சார்பில் கணித்தமிழ் சொற்பொழிவு நிகழ்ச்சி எழும்பூரில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வை தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார்.

'செயற்கை நுண்ணறிவும் கலைகளும்' என்ற தலைப்பில் முனைவர் மதன் கார்க்கி பேசும்போது, ""ஒரு கலையின் முக்கியமானபணிஉணர்வைகடத்துவது தான். சிற்பங்கள், ஓவியங்கள் நம்மிடம் பேச வேண்டும். பாடல்கள் நம்முடன் கலந்திட வேண்டும். இதெல்லாம் செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்பட்டால், அதே உணர்வை நமக்கு தருமா? இதில் சரி எது, தவறு எது என்பதில்லை. ஆனால் அந்த கேள்வி அவசியம். எதிர்காலத்தில் கருவிகளுடன் நாம் போட்டிபோடப்



போகிறோம். அதற்கு தயாராகி கொள்ள வேண்டும்" என்றார்.

இந்நிகழ்ச்சியில் கணித்தமிழ் மின் இதழை வெளியிட்டு அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பேசியதாவது: இன்றைக்கு இருக்கும் தொழில்நுட்பத்தில் தமிழில் என்ன செய்தால், தமிழின் பயன்பாட்டை அதிகரிக்கலாம் என்று திட்டமிட்டு பல முயற்சிகளை முன்னெடுத்து வருகிறோம்.

அதன் ஒருபகுதியாக இந்த சொற்பொழிவுநடத்தப்படுகிறது. எந்த ஒரு கலாச்சாரத்துக்கும் மொழி என்பது உச்சகட்ட அடையாளம் ஆகும். நம் அனைவரின் ரத்தத்திலும் நம் தாய்மொழி கலந்திருக்கிறது. உலக மொழிகளில் தமிழைவிட வேறு எந்த மொழிக்கும் அதிக வரலாறு கிடையாது.

அந்த அளவுக்கு பழமையும், பெருமையும் இருந்தாலும்கூட காலத்துக்கு ஏற்ப மொழி முன்னேறினால்தான் அதன் வளர்ச்சி நீடிக்கும். உலக பொருளாதாரத்தின் மையமாக இந்தியா உருவெடுத்து வருகிறது. அதன்படி வளரும் தொழில்நுட்பத்தில் மொழியின் அடையாளமும், பயனும் மாறிக் கொண்டே இருக்கிறது. அதற்கேற்பநாமும் முன்னேற வேண்டும்.

இதையொட்டி தமிழக அரசால் முன்னெடுக்கப்படும் அனைத்து முயற்சிகளிலும் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கப்படுகின்றன. அதில் இணையவழி கல்விக் கழகம் முக்கிய பங்காற்றுகிறது.

குறிப்பாக கடந்த 2 ஆண்டுகளில் டிஜிட்டல் நூலகம், செல்போன் செயலிகள் போன்றவற்றை உருவாக்கியிருக்கிறது. அடுத்தகட்டமாக செயற்கை நுண்ணறிவுமூலம் தகவல்களை கொடுப்பதற்காக தமிழில் தரவு அமைப்புகளையும் உருவாக்கி வருகிறோம். இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்வில் தமிழ் இணைய கல்விக்கழகத்தின் இயக்குநர் சே.ரா.காந்தி, எத்திராஜ் மகளிர் கல்லூரி தலைவர் வி.எம். முரளிதரன், முதல்வர் எஸ். உமா கவுரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து மத்திய அரசு விளக்க வேண்டும் பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தல்

சென்னை, டிச.19

ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து விளக்கமளிக்க வேண்டும் என மத்திய அரசுக்கு தேமுதிக தலைவர் பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கு ஒவ்வொரு கட்சியினரின் நிலைப்பாடு வெவ்வேறாக இருக்கிறது. மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி இருந்தபோது ஆதரவு தான் தெரிவித்து கொண்டிருந்தார்.

அவருடைய 'நெஞ்சிக்கு நீதி' புத்தகத்தில் கூட ஆதரவு தெரிவித்திருக்கிறார். ஆனால் இன்றைக்கு முதல்வர் ஸ்டாலின்,



மத்தியில் கூட்டணியில் இல்லாததால், அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்.

தேமுதிகவை பொறுத்தவரை ஒரே நாடு ஒரே தேர்தல் என்பதை ஒரு வார்த்தையில் முடித்துவிட முடியாது.

140 கோடிக்கு மேல் மக்கள் தொகை கொண்ட நாடு இந்தியா. அந்த வகையில் மசோதாவை நிறைவேற்றி இருப்பது நாட்டிற்கும், மக்களுக்கும் நல்லதா என்பதை மத்திய அரசு தான் வெளிப்படையாக தெளிவான விளக்கம் அளிக்க வேண்டும்.

ஒட்டுமொத்த மக்களின் ஆதரவோடுதான் அந்த மசோதா செல்லுபடி ஆகவேண்டும். இல்லையென்றால் ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா வெற்றிபெறுமா இல்லையா என்பது கேள்விக்குறிதான்.

டெல்டா மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு, குடும்ப அட்டைகள் மூலம் தலா ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும். முதல்கட்டமாக ரூ.5 ஆயிரமாவது விடுவிக்க வேண்டும்.

எப்போது பார்த்தாலும் மத்திய அரசு மீது குறை சொல்லிவிட்டு தமிழக அரசு ஓட முடியாது. அதேபோல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறைந்தபட்சம் ஒரு ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் வழங்க அரசு முன்வரவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## சென்னை, புறநகர் மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்பு வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

சென்னை, டிச.19

வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக சென்னை மற்றும் புறநகர் மாவட்டங்களில் இன்று மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மைய இயக்குநர் பா. செந்தாமரைக்கண்ணன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தெற்கு வங்கக் கடலின் மத்தியப் பகுதிகளில் நேற்று முன்தினம் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி நேற்று தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவியது. இது நாளைக்குள் மேலும் வலுப்பெற்று, மேற்கு வடமேற்கு திசையில் தமிழக கடலோரப் பகுதிகளை நோக்கி நகரக்கூடும்.

இதன் காரணமாக வட கடலோர தமிழகத்தின் பெரும்பாலான இடங்களிலும், இதர பகுதிகளில் சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், விழுப்புரம்,



கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மற்றும் புதுச்சேரியில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. நாளை சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

வடதமிழக கடலோரப் பகுதிகள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று தரைக்காற்று மணிக்கு 35 முதல் 45 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 80.6 82.4 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 73.475.2 டிகிரி பாரன்ஹீட் அளவில் இருக்கும்.

தெற்கு அரபிக்கடலின் மத்திய பகுதிகள் மற்றும் பூமத்திய ரேகையையொட்டிய இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் இன்றும், தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதையொட்டிய குமரிக்கடல் பகுதிகள், தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகள், தென்மேற்கு வங்கக் கடலின் வடக்கு பகுதிகள், மத்திய மேற்கு வங்கக் கடலின் தெற்கு பகுதிகளில் இன்றும், நாளையும் மணிக்கு 35 முதல் 45 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 55 கி.மீ. வேகத்திலும் சூறாவளிக் காற்று வீசக்கூடும். எனவே, மீனவர்கள் இப்பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அம்பேத்கர் குறித்த பேச்சுக்கு அமித் ஷா மன்னிப்பு கோர வலியுறுத்தி எதிர்க்கட்சி எம்பிக்கள் ஆர்ப்பாட்டம்

புதுடெல்லி, டிச.19

அம்பேத்கர் குறித்து அமித் ஷா பேசிய கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அவர் மன்னிப்பு கோர வலியுறுத்தியும் எதிர்க்கட்சி எம்பிக்கள் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று (புதன்) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே உள்பட மக்களவை மற்றும் மாநிலங்களவையைச் சேர்ந்த எதிர்க்கட்சி எம்பிக்கள் ஏராளமானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். இந்திய அரசியலமைப்புச் சிற்பியை அமித் ஷா அவமதித்துவிட்டதாகவும் தனது பேச்சுக்காக அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

அமித் ஷாவின் பேச்சை கண்டித்துப் பேசிய காங்கிரஸ் எம்பி கவுரவ் கோகாய், "அரசியலமைப்பு விவாதத்தின் போது நேற்று (செவ்வாய் கிழமை) மாநிலங் களவையில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, டாக்டர் பி.ஆர். அம்பேத்கரை இழிவுபடுத்திவிட்டார். பாஜகவினருக்கு அம்பேத்கர் மீது மரியாதை இல்லை என்பதையே இது காட்டுகிறது. அம்பேத்கரின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாகவும், அவர் வாழ்ந்த காலத்தில் அவர் எழுப்பிய பிரச்சி



னைகளுக்கு ஆதரவாகவும் இண்டியா கூட்டணி சார்பில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது" என கூறினார்.

காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர் கூறுகையில், "அம்பேத்கர் மீது தனக்குள்ள எதிர்மறை மனப்பான்மையை அமித் ஷா நேற்று வெளிப்படுத்தினார். நாங்கள் அவருக்கு 'அம் பேத்கர் வாழ்க' என்று கூற முயற்சிப் போம். ஏனெனில், அவரால் அம்பேத்கரின் மரபை புல்டோசர் கொண்டு எதுவும் செய்ய முடியாது. அம்பேத்கர் மரபு என்பது ஓபிசி, எஸ்சி மற்றும் எஸ்டி மற்றும் பிற சிறுபான்மையினரின் ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்காக குரல் கொடுப்பது. சாவர்க்கரின் சிந்தனை அம்பேத்கருக்கு எதிராக இருக்கும். நாங்கள் அவர்களை வெற்றி பெற அனுமதிக்க மாட்டோம். நாங்கள் அதை எதிர்த்துப் போராடுவோம். அமித் ஷா மன்னிப்பு கேட்க வேண்டும்" என வலியுறுத்தினார்.

மற்றொரு காங்கிரஸ் எம்பி கே.சுரேஷ் கூறுகையில், "உள்துறை அமைச்சர் அமித் ஷா, டாக்டர் பி.ஆர். அம்பேத்கரை அவமதித்துள்ளார். டாக்டர் பி.ஆர். அம்பேத்கருக்கு எதிரான இந்த கருத்துக்கு அவர் மன்னிப்பு கேட்க வேண்டும்" என கூறினார்.

இந்த விவகாரம் குறித்து கருத்து தெரிவித்துள்ள பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர் சிஆர் கேசவன், "நேற்றைய பேச்சு, அரசியலமைப்புக்கு எதிராக காங்கிரஸ் கட்சி செய்த வரலாற்று துரோகங்களையும், மன்னிக்க முடியாத பாவங்களையும் அம்பலப்படுத்தியது. காங்கிரஸ் கட்சி மீண்டும் மீண்டும் துஷ்பிரயோகம் செய்து, குடும்ப அரசியலை வலுப்படுத்த நமது அரசியலமைப்பை மாற்றியமைக்க முயற்சித்தது" என குற்றம் சாட்டினார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 75வது ஆண்டைக் குறிக்கும் விவாதத்தின் போது மாநிலங்களவையில் உரையாற்றிய அமித் ஷா, "பி.ஆர். அம்பேத்கரின் பெயரை பயன்படுத்துவது இப்போது ஒரு "பேஷன்" ஆகிவிட்டது. எதற்கெடுத்தாலும் அம்பேத்கர், அம்பேத்கர், அம்பேத்கர், அம் பேத்கர், அம்பேத்கர், அம்பேத்கர் என்று பேசுகிறார்கள். கடவுளின் பெயரை இவ்வாறு பலமுறை சொன்னாலாவது அவர்களுக்கு சொர்க்கத்தில் இடம் கிடைத்திருக்கும்.

அம்பேத்கரின் பெயரை 100 மடங்கு அதிகமாக எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால், அவரைப் பற்றிய உங்கள் உணர்வு என்ன என்பதை நான் கூற விரும்புகிறேன். ஜவஹர்லால் நேரு தலைமையிலான அரசாங்கத்துடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து முதல் அமைச்சரவையில் இருந்து பி.ஆர்.அம்பேத்கர் ராஜினாமா செய்ய நேரிட்டது. பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பழங்குடியினரை நடத்துவதில் திருப்தி இல்லை என்று அம்பேத்கர் பலமுறை கூறியுள்ளார். அவருக்கு ஒரு உத்தரவாதம் வழங்கப்பட்டது. அந்த உத்தரவாதம் நிறைவேறாததால், அவர் ராஜினாமா செய்தார்" என்று கூறினார்.

## ரூ.4 ஆயிரத்துக்கும் அதிகமான மின்கட்டணத்தை மின்வாரிய அலுவலகங்களில் செலுத்தும் வசதி திடீர் நிறுத்தம்

சென்னை, டிச.19

மின்வாரிய அலுவலகங்களில் ரூ.4 ஆயிரத்துக்கும் அதிகமான மின்கட்டணத்தை நேரடியாக செலுத்தும் வசதி கணினியில் முடக்கப்பட்டுள்ளது. முறையான அறிவிப்பின்றி நடைமுறைப்படுத்துவதால் ஊழியர்களும் பொதுமக்களும் அவதிக்கு ஆளாகியுள்ளதாக மின்ஊழியர் மத்திய அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு (சிஐடியு) பொதுச் செயலாளர் எஸ்.ராஜேந்திரன், மின்வாரிய தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது: தமிழகத்தில் 2024ம் ஆண்டு தரவுகளின்படி 3.45 கோடி மின் இணைப்புகள் உள்ளன.

இதில், தாழ்வழுத்த மின்நுகர்வோர் மட்டும் 3 கோடி பேர் உள்ளனர். இதில், ஒரு பகுதியினர் வங்கி, தபால் நிலையம், இசேவை மையம் மூலமாக



மின்கட்டணம் செலுத்துகின்றனர். அதேசமயம் பெரும்பாலான ஏழை, எளிய மின்நுகர்வோர் மின்வாரிய அலுவலகங்களில் உள்ள கவுன்ட்டர்களில் நேரடியாக கட்டணம் செலுத்துகின்றனர்.

கடந்த ஒரு ஆண்டாக மின்வாரிய நிர்வாகம், மின்கட்டண வசூல் முறைகளில் எந்தவிதமான உத்தரவுகளும் வழங்காமல், முன்னறிவிப்பும் இல்லாமல் பிரிவு அலுவலகங்களில் உள்ள மின்கட்டண வசூல் தொடர்பான மாற்றங்களை வாய்மொழி உத்தரவின் மூலம் தன்னிச்சையாக மாற்றி வருகிறது. இது ஊழியர்கள் மத்தியிலும், பொது மக்கள் மத்தியிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஏனெனில் ஏழை, எளியமக்கள் மின்கட்டணத்தை நேரடியாக செலுத்தி வரும் நுகர்வோரிடம், ஒரு மின் அட்டைக்கான கட்டணம் ரூ.10 ஆயிரத்துக்குள் இருந்தால் பணமாகவும், காசோலை, வரைவோலை (டிடி) மூலமாகவும் மின் ஊழியர்கள் பெற்று வந்தனர். ரூ.10 ஆயிரத்துக்கு மேல் செலுத்த வரும் நுகர்வோரிடம் காசோலை, வரைவோலை அல்லது ஆன்லைன் மூலம் மின்கட்டணம் செலுத்திட வலியுறுத்தி வருகின்றனர். அந்த அடிப்படையில், மின்நுகர்வோரும் தான் விரும்பும் விதத்தில் மின்கட்டணத்தை செலுத்தி வந்தனர்.

கடந்த சில மாதங்களாக ரூ.5 ஆயிரத்துக்கு மேல் மின்கட்டணம் செலுத்த வரும் மின்நுகர்வோரின் கட்டணத்தை பெறும் வசதி கணினியில் முடக்கப்பட்டது. அதேபோல் 2, 3 மின்கட்டண அட்டைகளின் மின்கட்டண தொகை ரூ.5 ஆயிரத்துக்கு மேல் வந்தாலும் அதுவும் செலுத்த முடியாமல் கணினியில் முடக்கப்பட்டது.

இந்நிலையில், தற்போது ரூ.4 ஆயிரம் மின்கட்டணம் செலுத்தும்மின்நுகர்வோருக்கும் கணினியில் முடக்கப்பட்டுள்ளது. கடந்த 16ம் தேதி முதல் இது அமல்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், மின்கட்டணம் செலுத்த வரும் மின்நுகர்வோர் கோபம் அடைந்து மின்கட்டண வசூல் மைய ஊழியர்களிடம் சண்டையிடும் நிகழ்வு ஆங்காங்கே நடக்கிறது. மின்கட்டணத்தை வாங்க மறுக்கும் ஊழியர்களிடம் வாரிய உத்தரவுகளை கேட்டு மிரட்டுகின்றனர். எனவே, மின்வாரியதலைவர் மின்கட்டண வசூல் முறைகளில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு முன்பு வாரிய உத்தரவுகளை வெளியிட்டு பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கலைஞரின் கனவு இல்லம் திட்டத்துக்கு மேலும் ரூ.400 கோடி ஒதுக்கீடு: முதல்வர் ஸ்டாலின் உத்தரவு

சென்னை, டிச.19

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசால் மேலும் ரூ.400 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது வரப்பெற்றுள்ள ரூ.400 கோடியும் சேர்ந்து மொத்தம் ரூ.1451.34 கோடி பெறப்பட்டு கட்டுமான நிலைக்கு ஏற்ப பயனாளிகளின் வங்கிகணக்கிற்கு நேரடியாக தொகை விடுவிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், """கலைஞரின் கனவு இல்லம்" திட்டத்தின் கீழ் 202425 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு ஒரு வீட்டிற்கு ரூ.3,50,000/ வீதம் மொத்தம் ரூ.3500 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கிராமப்புற பகுதிகளில் ஏறத்தாழ 8 லட்சம் குடிசை வீடுகள் உள்ளதாக "அனைவருக்கும் வீடு" என்ற கணக்கெடுப்பின் வழியாக கண்டறியப்பட்டதன் அடிப்படையில் "குடிசையில்லா தமிழ்நாடு" என்ற இலக்கினை அடையும் பொருட்டு, எதிர்வரும் 2030ஆம் ஆண்டிற்குள் ஊரக பகுதிகளில் 6 வருடங்களில் 8 லட்சம் வீடுகள் புதிதாக கட்டித்தர அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி நடப்பு நிதியாண்டில் (202425) ஒரு லட்சம் வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டின் பரப்பளவு, சமையலறை உட்பட, 360 சதுர அடியாகும். பயனாளிகளின் நிதிச்சுமையை குறைக்கும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ் ஜிகிழிசிணிவி சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகள் குறைந்த விலையில் கொள்முதல் செய்யப்பட்டு, துறை மூலம் வழங்கப்படுகிறது. வீட்டின் கட்டுமானத்திற்கு ஏற்ப தரை மட்ட நிலை, ஜன்னல் மட்ட நிலை, கூரை வேயப்பட்ட நிலை மற்றும் பணிமுடிவுற்ற பின்



என நான்கு தவணைகளில் ஒற்றை ஒருங்கிணைப்பு வங்கி கணக்கின் (Single Nodal Account-SNA) மூலம் தொகை நேரடியாக பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை தமிழ்நாடு அரசால் ரூ.1051.34 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, பயனாளிகளுக்கு வீட்டின் கட்டுமான நிலைக்கு ஏற்ப ரூ.860.31 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், துறை மூலம் வழங்கப்படும் சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகளுக்கு (Steel) என ரூ.135.30 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.995.61 கோடி இதுவரை கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கலைஞரின் கனவு இல்லம் திட்டம் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு லட்சம் வீடுகளும் விரைவாக கட்டப்பட்டு வருகிறது. இதனை கருத்தில் கொண்டு, வீடுகளின் கட்டுமான பணிகளை துரிதப்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசு மேலும் ரூ.400 கோடி விடுவித்து ஆணை வழங்கியுள்ளது.

தற்போது வரப்பெற்றுள்ள ரூ.400 கோடியும் சேர்ந்து மொத்தம் ரூ.1451.34 கோடி பெறப்பட்டு கட்டுமான நிலைக்கு ஏற்ப பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக தொகை விடுவிக்கப்பட்டு வருகிறது. இந்நிதியாண்டிற்குள் அனைத்து வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர தமிழ்நாடு அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேனி மாவட்டம் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத்திருத்த கூட்டம்

தேனி, டிச.19




தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தம் 2025 வாக்காளர் பட்டியல் தேர்தல் பார்வையாளர் டாக்டர்.பி.மகேஸ்வரி தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.வி.ஷஜீவனா, முன்னிலையில் நடைபெற்றது.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி 01.01.2025 ஆம் தேதியினை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம் பணிகளுக்கான சிறப்பு முகாம் நடைபெற்று படிவங்கள் பெறப்பட்டதை தொடர்ந்து, இரண்டாம் கட்ட சிறப்பு ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் சிறப்பு சுருக்கத் திருத்த முகாமில் பெறப்பட்ட படிவங்கள் குறித்து மேற்கொள்ளப்படும் பணிகளை தொகுதி வாரியாக ஆய்வு மேற்கொண்டு. முகாம்களில் பெறப் பட்ட படிவங்களை விரைவாக முடிவு செய்ய அனைத்து அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் இரட்டை வாக்காளர் பதிவுகள் இல்லாத வகையில் கள ஆய்வு மேற்கொண்டு ஆரோக்கியமான வாக்காளர் பட்டியல் வெளியிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் பார்வையாளர் அவர்களால் ஆண்டிபட்டி மற்றும் தேனி வட்டத்தில், சிறப்புச் சுருக்கத் திருத்தத்தின் போது பெறப்பட்ட படிவங்களை நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத் பீடன்,, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துமாதவன், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் தாட்சாயணி அனைத்து வட்டாட்சியர்கள், நகராட்சி ஆணையாளர்கள், மண்டல அலுவலர்கள், தனி வட்டாட்சியர் (தேர்தல்) ஆகியோர் கலந்து கொண்டனர்.




18வது உலக சதுரங்க விளையாட்டு சாம்பியன்ஷிப் 2024 ல் முதல் இடம் பிடித்த நமது தமிழ்நாட்டைச் சேர்ந்த 18 வயதே நிரம்பிய இளம் விளையாட்டு வீரர் குகேஷ் டொம்மராஜுக்கு சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளியின் மூலம் நடத்தப்படும் விகாஸ் செஸ் அகாடமியில் பயிற்சி பெறும் சதுரங்க விளையாட்டு வீரர்கள் , அவர்களுடைய வாழ்த்து மடலை அஞ்சல் அட்டைகள் மூலமாக அனுப்பி மகிழ்ந்தனர்.

# சிவகங்கை அருகே இடையமேலூர் துணைமின் நிலையத்தில் நாளை மறுநாள் மின்தடை

சிவகங்கை, டிச.19

சிவகங்கை மாவட்டம் இடையமேலூர் துணை மின் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெறுவதையொட்டி சாலூர், இடையமேலூர், மலம்பட்டி, கூட்டுறவுப்பட்டி, ஒக்கபட்டி, லில்லிபட்டி, மேலப்பூங்குடி, பாப்பாகுடி, கண்டாங்கிபட்டி, குமாரபட்டி, தமராக்கி உள்ளிட்ட இந்த துணை மின் நிலையத்தில் இருந்து மின் விநியோகம் செய்யப்படும் பகுதிகளுக்கு நாளை மறுநாள் டிச21 காலை 10மணி முதல் பிற்பகல் 2மணி வரை மின் விநியோகம் நிறுத்தப்பட உள்ளது. இவ்வாறு சிவகங்கை மின் பகிர்மான செயற்பொறியாளர் முருகையன் தெரிவித்துள்ளார்.

# சிவகங்கை மாவட்டம் வேலைநாடும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில், நாளை வேலைவாய்ப்பு முகாம்

சிவகங்கை, டிச.19



வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு மாதமும் இரண் டாம் அல்லது மூன்றாம் வெள்ளிக்கிழமையன்று சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. அதன்படி, நாளை டிச20 காலை 10.30 மணி அளவில் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மைய அலுவலக வளாகத்தில் சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது. இம் முகாமில், வேலை அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான ஆட்களை தேர்வு செய்து கொள்ளலாம். சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த வேலை நாடுநர்கள் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பினைப் பெறலாம்.

மேலும், இம்முகாமில் இலவச திறன் பயிற்சிக்கான விண்ணப்ப படிவம், போட்டித் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்பில் மாணவர் சேர்க்கை, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்ப படிவம் ஆகியவையும் வழங்கப்படும். எனவே, விருப்பமுள்ளவர்கள் பத்தாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை மற்றும் ஐ.டி.ஐ, டிப்ளமோ படித்த இளைஞர்கள் தங்களது கல்விச்சான்று, குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு அடையாள அட்டை, ஆதார் அட்டையுடன் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம். இம்முகாமில் பணிவாய்ப்பு பெறுவோருக்கு பதிவு மூப்பு ஏதும் ரத்து செய்யப்படமாட்டது. எனவே வேலை நாடுநர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.



சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர் அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு மாவட்ட காவல்துறையின் முக்கிய அறிவிப்பு பொதுமக்கள் மற்றும் உரிமையாளர்கள் நீங்கள் தயாரிக்கும் பொருட்கள் மற்றும் அன்றாடம் கடைகளில் வாங்கும் எலக்ட்ரானிக்கல் பொருட்கள் உடமைகள் காப்பித்தூள் டீ தூள் சோப்புத்தூள் மற்றும் இதர பொருட்கள் ஏதேனும் விலை உயர்ந்த நிறுவன பெயர்களை கொண்ட போலியான பெட்டிகளில் பைகளில் அல்லது பொருட்களில் சின்னம் பொறிக்கப்பட்டு இருப்பதை தங்களுக்கு தெரிந்தால் உரிய ஆவணங்களுடன் விருதுநகர் காவல் ஆய்வாளர் +919498184343 சிறப்பு சார்பு ஆய்வாளர்கள் சிவகங்கை +918300000527, ராமநாதபுரம் +919498188455 காவல்துறையினரை தொடர்பு கொள்ளலாம்.

# செஸ் சிறப்பு அகாடமி உருவாக்கப்படும் குகேஷின் பாராட்டு விழாவில் முதல்வர் அறிவிப்பு

சென்னை, டிச.19




சிங்கப்பூரில் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன்ஷிப்பில் சீனாவின் டிங் லிரெனை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றிருந்தார் இந்திய கிராண்ட் மாஸ்டரான தமிழகத்தைச் சேர்ந்த 18 வயதான டி.குகேஷ். இதன் மூலம் அவர், இளம் வயதில் உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற முதல் வீரர் என்ற சாதனையை படைத்திருந்தார். மேலும் விஸ்வநாதன் ஆனந்த்துக்கு பிறகு உலக சாம்பியன் பட்டத்தை வென்ற 2வது இந்திய வீரர் என்ற பெருமையையும் பெற்றிருந்தார்.

உலக சாம்பியன் பட்டம் வென்ற குகேஷ், சிங்கப்பூரில் இருந்து நேற்று முன்தினம் தாயகம் திரும்பினார். இந்நிலையில் நேற்று மாலை சென்னை கலைவாணர் அரங்கத்தில் தமிழக அரசு சார்பில் உலக செஸ் சாம்பியனான குகேஷுக்கு பாராட்டு விழா நடத்தப்பட்டது. இதில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குகேஷை ஊக்குவிக்கும் விதமாக ரூ.5 கோடியை ஊக்கத் தொகையாக வழங்கினார். விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், 5 முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். விழா மேடையில் குகேஷ், உலக சாம்பியன்ஷிப்பில் பெற்ற வெற்றி கோப்பையை முதல்வரிடம் வழங்கி வாழ்த்து பெற்றார்.

விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது: 18 வயதில் உலக செஸ் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ள குகேஷை பாராட்டுகிறேன். இன்றைக்கு குகேஷை உலகமே வியந்து பாராட்டிக் கொண்டிருக்கிறது. வெற்றி பெற்றதும் குகேஷ் கொடுத்த ஒரு பேட்டியைப் படித்தேன். அதில் அவர், "விளையாட்டுத் திறமையோடு சேர்ந்து சிறந்த குணம், மன உறுதி ஆகியவையும் இணைந்தால்தான், இந்த வெற்றி கிடைத்திருக்கிறது'' என்று அவர் சொல்லி இருந்தார்.

அவர் சொன்ன விளையாடும் திறன், சிறந்த குணம், மன உறுதி மட்டுமல்ல. எப்போதும் புன்னகையோடு இருக்கும் அவரின் முகமும், விமர்சனங்களை தாங்கும் இயல்பும் தான், அந்த வெற்றிக்கு காரணம். 12 வயதில் 'கிராண்ட் மாஸ்டர்' பட்டத்தை வென்று, இன்று உலகச் செஸ் சாம்பியன் ஆகிவிட்டார். இதையெல்லாவற்றையும் சாதிக்க குகேஷ் எடுத்துக் கொண்டது, வெறும் 11 ஆண்டுகள்தான்.

இதற்குப் பின்னால் இருக்கும் உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை, இலக்கை நோக்கிய பயணம் ஆகியவற்றை நம்முடைய தமிழ்நாட்டு இளைஞர்கள் உத்வேகமாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு குகேஷின் வெற்றி, லட்சக்கணக்கான குகேஷ்களை உருவாக்க வேண்டும்.

விஸ்வநாதன் ஆனந்த் இரண்டு முறை உலக சாம்பியன் பட்டங்கள் பெற்றபோதும் சரி. இப்போது குகேஷ் உலக சாம்பியன் ஆகும்போதும் சரி. அவர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுத்து, பாராட்டி பெருமைப்படுத்தும் வாய்ப்பு திமுக அரசுக்கு கிடைத்திருப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்னும் பல திறமை வாய்ந்த செஸ் வீரர், வீராங்கனைகளை வளர்த்தெடுக்கவும், உருவாக்கவும் தமிழ்நாடு விளை யாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம், செஸ் விளையாட்டுக்கென 'ஹோம் ஆஃப் செஸ்' என்ற சிறப்பு அகாடமி உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

குகேஷின் வெற்றி கொடுக்கும் நம்பிக்கை மற்றும் இந்தச் சிறப்பு அகாடமி ஆகியவற்றால் தமிழ்நாட்டின் கிராண்ட் மாஸ்டர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கும் என உறுதியாக நம்புகிறேன். கொரட்டூரில் பிறந்த குகேஷ் இன்று உலகம் போற்றும் சதுரங்க வீரராக வளர்ந்த வரலாறு மற்ற வீரர்களுக்கும் வழிகாட்டட்டும். இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக வாலஜா சாலையில் அமைந்துள்ள அரசினர் தோட்டம் மெட்ரோ ரயில் நிலையத்தின் முன்பிருந்து திறந்த வெளி வாகனத்தில் குகேஷ் ஊர்வலமாக கலைவாணர் அரங்கத்துக்கு அழைத்துவரப்பட்டார்.

# திண்டுக்கல் மாவட்டத்தில் தொழிலாளர் நல வாரியங்கள் மூலம் 98,895 தொழிலாளர்களுக்கு ரூ.70.46 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்

திண்டுக்கல், டிச.19



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டு மக்களின் வாழ்வில் புது ஒளியை ஏற்படுத்தும் வகையில், பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக தொழிலாளர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்

திண்டுக்கல் மாவட்டத்தில் இதுவரை(15.12.2024) கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம், உடலுழைப்பு மற்றும் இதர 16 நல வாரியங்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் நல வாரியம் என்ற பிரிவுகளில் பதிவு செய்து, பதிவை புதுப்பித்து மொத்தம் 1,46,904 தொழிலாளர்கள் உள்ளனர். தொழிலாளர் நல வாரியங்கள் சார்பில் 07.05.2021 முதல் 15.12.2024 ஆம் தேதி வரை கல்வி உதவித் தொகை 43,630 நபர்களுக்கு ரூ.7.08 கோடி மதிப்பிலும், திருமண உதவித்தொகை 929 நபர்களுக்கு ரூ.1.29 கோடி மதிப்பிலும், கண்கண்ணாடி 12 நபர்களுக்கு ரூ.6,000 மதிப்பிலும், இயற்கை மரணம் நிவாரணத்தொகை 788 நபர்களுக்கு ரூ.2.73 கோடி மதிப்பிலும், விபத்து மரணம் நிவாரணத் தொகை 27 நபர்களுக்கு ரூ.30.70 இலட்சம் மதிப்பிலும், பணியிட விபத்து மரணம் நிவாரணத் தொகை 7 நபர்களுக்கு ரூ.35.00 இலட்சம் மதிப்பிலும், புதிய குடும்ப ஓய்வூதியம் திட்டம் 60 நபர்களுக்கு ரூ.63,000 மதிப்பிலும், மாதாந்திர ஓய்வூதியம் 14,077 நபர்களுக்கு ரூ.57.53 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் 98,895 தொழிலாளர்களுக்கு ரூ.70.46 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்டத்தில் வெவ்வேறு இடங்களில் கட்டுமான பணியின்போது ஏற்பட்ட விபத்தில் குஜிலியம்பாறை வட்டம், ஆர்.கொள்ளப்பட்டி அருகே தாளிப்பட்டியைச் சேர்ந்த பெ.சீனிவாசன் என்பவர் மகன் பாலாஜி மற்றும் ஒட்டன்சத்திரம் வட்டம், ரெட்டியபட்டியைச் சேர்ந்த செந்தில் குமார் என்பவர் மகன் ராதாகிருஷ்ணன் ஆகியோர் உயிரிழந்ததையடுத்து அவர்களது குடும்பத்தினருக்கு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் பணியிடத்து விபத்து மரணம் உதவித் தொகையாக தலா ரூ.5.00 இலட்சத்திற்கான காசோலை மற்றும் திண்டுக்கல் நாகையகோட்டையைச் சேர்ந்த சரஸ்வதி என்பவர் குடும்பத்திற்கு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் ஈமச்சடங்கு மற்றும் விபத்து மரணம் உதவித்தொகையாக ரூ.2.05 இலட்சம் மற்றும் பயனாளிகளுக்கு திருமண உதவித்தொகை ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா.பூங்கொடி, , 16.12.2024 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கினார்.

உதவித்தொகை பெற்று பயனடைந்த பாலாஜி என்பவரது மகன் அரிகரன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரியத்தில் பெயர் பதிவு பெறாத கட்டுமான தொழிலாளர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்படுவதை அறிந்தோம். அதையடுத்து. அலுவலர்கள் கேட்ட ஆவணங்களை நாங்கள் முறையான விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தோம்.

எங்கள் மனுமீது அலுவலர்கள் உரிய நடவடிக்கை மேற்கொண்டதையடுத்து, தற்போது எங்களுக்கு பணியிடத்து விபத்து மரணம் உதவித்தொகையாக ரூ.5.00 இலட்சம் கிடைத்துள்ளது. இந்த தொகை எங்கள் குடும்பத்திற்கு பெரிதும் பயனுள்ளதாக உள்ளது. எங்கள் குடும்ப கஷ்டம் தீர வழிவகை ஏற்படுத்திய தமிழ்நாடு அரசுக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம், என தெரிவித்தார்.

உதவித்தொகை பெற்று பயனடைந்த ராதாகிருஷ்ணன் என்பவருடைய தாயார் வீரம்மாள் தெரிவித்ததாவது:

எனது இரண்டாவது மகன் ராதாகிருஷ்ணன் 16.03.2023 அன்று கிணறு தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, திடீரென்று மண் சரிந்து விழுந்ததில் மண்ணில் புதைந்து உயிரிழந்தார். இது எங்கள் குடும்பத்திற்கு பேரிடியாக இருந் தது. அப்போதுதான், தொழிலாளர் நல வாரியம் மூலம் உதவித்தொகை வழங்கப்படுவதை சக தொழிலாளர்கள் மூலம் அறிந்து, திண்டுக்கல் தொழிலாளர் நல வாரிய அலுவலகத்திற்கு சென்று விசாரித்தோம். அப்போதுதான், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரியத்தில் பெயர் பதிவு பெறாத கட்டுமான தொழிலாளர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படுவது எங்களுக்கு தெரியவந்தது. அதையடுத்து. அலுவலர்கள் கேட்ட ஆவணங்களை நாங்கள் முறையான விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தோம். எங்கள் மனு மீது அலுவலர்கள் உரிய நடவடிக்கை மேற்கொண்டதையடுத்து, தற்போது எங்களுக்கு பணியிடத்து விபத்து மரணம் உதவித்தொகையாக ரூ.5.00 இலட்சம் கிடைத்துள்ளது. இந்த தொகை எங்கள் குடும்பத்திற்கு பெரிதும் உதவியாக உள்ளது. எங்களைப்போன்ற ஏழை, எளிய மக்களின் துயர் தீர வழி வகை ஏற்படுத்திய தமிழ்நாடு அரசுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம், என தெரிவித்தார்.

# தூத்துக்குடி செல்வநாயகபுரத்தில் உள்ள மின்மோட்டார் அறை இருக்கும் பகுதியில் அமைச்சர் ஆய்வு

தூத்துக்குடி, டிச.19



சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான கீதா ஜீவன் தூத்துக்குடி செல்வநாயகபுரத்தில் உள்ள மின் மோட்டார் அறை இருக்கும் பகுதியில் ஆய்வு மேற்கொண்டார். அதன்பிறகு ஆதிபராசக்தி நகருக்கு சென்ற அவர் அங்கு தேங்கியிருக்கும் வெள்ள நீர் வெளியேற்றும் பணியை பார்வையிட்டார். அங்கிருந்து தூத்துக்குடி கடற்கரை சாலையில் உள்ள ESI மருத்துவமனை சென்ற அவர் அங்குள்ள ஊழியர்களை சந்தித்து, மருத்துவமனை வளாகத்தில் தேங்கியிருக்கும் மழை நீரை மின்மோட்டார் மூலம் வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தினார்.

பின்னர் தூத்துக்குடி மாநகராட்சி 16வது வார்டுக்கு உட்பட்ட P&T காலனி பகுதியில் பொது மக்களைச் சந்தித்ததுடன், அங்க தேங்கியுள்ள மழை நீர் மின்மோட்டார் மூலம் வெளியேற்றும் பணியை பார்வையிட்டார்.

அதன் பிறகு 16வது வார்டுக்கு உட்பட்ட கதிர்வேல் நகர் பகுதியில் தமிழ்நாடு அரசின் வேளாண்துறை மூலம் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்த அதிக திறன் கொண்ட மின் மோட்டார் மூலம் வெள்ள நீர் வெளியேற்றப்படும் பணியை ஆய்வு செய்தார்.

இந்த நிகழ்வுகளின் போது மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், பகுதி செயலாளர் ஜெயக்குமார், மாமன்ற உறுப்பினர் கண்ணன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அபிராமி நாதன், மாநகர இளை ஞரணி அமைப்பாளர் திரு. அருண் சுந்தர், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் டினோ உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.




தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் நேரு யுவ கேந்திரா சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான பல்வேறு போட்டிகளில் அழகப்பா அரசு கலைக்கல்லூரி மாணவர்கள் பங்கேற்றுப் பரிசுகளை வென்றனர். குழு நடனப்போட்டியில் தொழில் நிர்வாகத்துறை மாணவிகள் பொன்னழகு, பிரியதர்ஷினி, தனலெட்சுமி,கற்பகம், கீர்த்தீகா,அபர்ணா, தனலெட்சுமி,அபிநயா ஆகியோர் முதல் பரிசும், குழுப்பாடல் போட்டியில் ஆங்கிலத்துறை மாணவிகள் விஜி மற்றும் அன்னபூரணி இரண்டாம் பரிசும், பேச்சுப்போட்டியில் தமிழ்த்துறை மாணவி மாதரசி மூன்றாம் பரிசும், தனிப்பாடல் போட்டியில் ஆங்கிலத்துறை மாணவி விஜி முதல் பரிசும் பெற்றனர். வெற்றி பெற்றுப் பரிசுத்தொகையும், சான்றிதழ்களும் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்த மாணவியரைக் கல்லூரி முதல்வர் முனைவர் பெத்தாலெட்சுமி பாராட்டினார். நுண்கலை மன்றக் குழுவைச் சார்ந்த பேராசிரியர்கள் முனைவர் செல்வமீனா, முனைவர் லெட்சுமணக்குமார், ஷர்மிளா உள்ளிட்டோர் மாணவிகளைப் பாராட்டி வாழ்த்தினர்.

## பழனி அருகே நெய்க்காரப்பட்டி பேரூராட்சியில் கவுன்சிலர்கள் உள்ளிருப்பு போராட்டம்

பழனி டிச19

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே நெய்க்காரப்பட்டி பேரூராட்சியில் 15 வார்டுகள் உள்ளன. இங்கு 14 வார்டுகளில் திமுகவைச் சேர்ந்தவர்களே கவுன்சிலராக உள்ளனர்.



இந்நிலையில் பேரூராட்சி தலைவராக உள்ள கருப்பாத்தாள் தன்னிச்சையாக செயல்படுவதாகவும் பேரூராட்சியில் பொதுமக்களுக்கு தேவையான கால்வாய் வசதி குடிநீர் வசதி சாலை வசதி உள்ளிட்ட எந்த பணிகளும் தற்போது வரை பலமுறை கோரிக்கைகள் வைத்தும் பணிகள் நடைபெறவில்லை என கவுன்சிலர்கள் குற்றம் சாட்டி வந்தனர். இந்நிலையில் தங்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றாத பேரூராட்சி தலைவர் கருப்பாத்தாளை கண்டித்து அனைத்து வார்டு கவுன்சில் அனைவரும் தங்களது ராஜினாமா கடிதத்துடன் பேரூராட்சி அலுவலகத்தில் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## மானாமதுரை பகுதிகளில் நாளை மின்தடை

மானாமதுரை, டிச.19

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சிப்காட் துணை மின் நிலையத்தில் நாளை வெள்ளிக்கிழமை டிச20 மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெறுகின்றன. எனவே அன்று காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை மானாமதுரை, சிப்காட், ராஜகம்பீரம், கட்டிக்குளம், மிளகனூர், முத்தனேந்தல், தெ. புதுக்கோட்டை, கீழப்பசலை, சங்கமங்கலம், குறிச்சி, முனைவென்றி, கச்சாத்தநல்லூர், நல்லாண்டிபுரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது என செயற்பொறியாளர் ஜான்சன் தெரிவித்துள்ளார்.



இராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை செயலாளர் கொ. வீரராகவராவ், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் பா.விஷ்ணு சந்திரன்,மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன். இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் பரமக்குடி சார் ஆட்சியர் அபிலாஷா கௌர்,ஆகியோர் உள்ளனர்.

## ஆண்டிபட்டியில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மூலம் நீண்ட நாட்கள் சிறையில் இருக்கும் கைதி விடுதலை



ஆண்டிபட்டி டிச 19

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே தேக்கம்பட்டியில் மாவட்ட சிறைச்சாலை உள்ளது.

இங்கு பல்வேறு வழக்குகளில் நீண்ட நாட்கள் சிறையில் தண்டனை பெற்ற கைதிகளை அழைத்து நீதிமன்ற உத்தரவின் படி நீதித்துறை நடுவர் நீதிபதி ரமேஷ் விசாரித்ததில் ஏழ்மை,குடும்பத்தினர் ஒத்துழைப்பு இல்லாதது மற்றும் வழக்காட வழக்கறிஞர் தரப்பினர் இல்லாததாலும் கைதி தங்களது குற்றத்தை ஒப்புகொண்டதால் சிறையில் இருந்த காலத்தை தண்டனை காலமாக கருதி ரூ.10000 அபதாரத்துடன் ஆண்டிபட்டி பகுதியை சேர்ந்த ஞான குருசாமி மகன் பாண்டியன் என்பவரை அறிவுரை வழங்கி ஆண்டிபட்டி நீதிமன்ற மூலம் விடுதலை செய்தனர். இந்நிகழ்வில் சட்டப்பணிகள் ஆணைக்குழு வழக்கறிஞர் பா. சீனிவாசகம் சிறைத்துறை அதிகாரிகள், வட்ட சட்ட பணிக்குழு தன்னார்வலர்கள் உடனிருந்தனர்.

## திண்டுக்கல் மாவட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தம் நேரிடையாகச் சென்று கள ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர்

திண்டுக்கல் டிச19

திண்டுக்கல் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தம் 2025 ஐ முன்னிட்டு விண்ணப்பங்கள் அளித்த மனுதாரர் வீடுகளுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி, நேற்று ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் நேரடையாக சென்று கள ஆய்வு மேற்கொண்டார்.

அதன்படி, ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அத்திக்கோம்பை, அம்பிளிக்கை, மண்டவாடி உட்பட பல்வேறு கிராமங்களில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி, மனுதாரர் வீடுகளுக்கு நேரடையாக சென்று விசாரணை மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, வாக்காளர் பட்டியல் சிறப்புச் சுருக்க திருத்தம் 2025ஐ முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள ஏழு(7) சட்டமன்றத் தொகுதிகளுக்கும் வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த 29.10.2024 அன்று வெளியிடப்பட்டது.



திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்றத் தொகுதிகளிலும் 01.01.2025 ஆம் தேதியைதகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த பணிகள் மேற்கொள்ள சிறப்பு முகாம் நடத்தப்பட்டன. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கு படிவம் ரூ 6, வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம் செய்வதற்கு படிவம்7, பிழைத்திருத்தம், முகவரி மாற்றம் மற்றும் வாக்காளர் அடையாள அட்டை பெற படிவம்ரூ 8, வாக்காளர் பட்டியலுடன் ஆதார் விவரங்களை சேர்க்க படிவம் 6பி ஆகிய படிவங்களில் பூர்த்தி செய்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

இந்த விண்ணப்பங்கள் தொடர்பாக இன்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல் திருத்தம் போன்றவற்றுக்கு மனு செய்த மனுதாரர்களின் வீடுகளுக்கு நேரிடையாக சென்று, விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் சரியாக உள்ளதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு, வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தம் பணிகளை செம்மையாக மேற் கொள்ளவும், தகுதியுள்ள அனைவரின் பெயரையும் வாக்காளர் பட்டியலில் சேர்த்திடவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, வட்டாட்சியர் பழனிச்சாமி, தேர்தல் துணை வட்டாட்சியர் அன்சாரி மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## ஈஞ்சம்பாக்கத்தில் இளைஞர் அணி தி.மு.க.சார்பில் உதயநிதியின் உதய நாள் பாடல் வெளியீட்டு விழா - நலத்திட்ட உதவிகள் வழங்கல் பொதுக்கூட்டம்

ஈஞ்சம்பாக்கம் டிச19

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி தி.மு.க. சார்பில் காலையில துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு1047 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் பொதுக்கூட்டம் மற்றும் துணை முதல்வர் உதய நிதி ஸ்டாலின் பிறந்தநாள் பாடல் வெளியிட்டு நிகழ்ச்சி ஈஞ்சம்பாக்கம், திருவள்ளுவர் சாலை ஈஞ்சம்பாக்கம் பெத்தேல் நகர் பகுதியில் சிறப்பாக நடைபெற்றது.



இந்நிகழ்ச்சிக்கு சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கா. வீ.தியாகராஜன் தலைமை வகித்தார். பகுதி கழகச் செயலாளர், 15வது மண்டல குழு தலைவர், நீலாங்கரை வி. இ .மதியழகன் முன்னிலை வகித்தார்.

வட்டக் கழக செயலா ளர் எஸ். கர்ணா, கி. சத்தியவேலன், விமலா கர்ணா, எஸ். ஜானகிராமன், மா.மகேஸ்வரன், ஜி. விஜய குமார், வி.எஸ்.சுதா, எம். பாஸ்கரன், து. ராஜா, டி. தாஸ், க. குருபிரசன்னா, க. ஏகாம்பரம், கே.வி.சாந்தப்பன், எஸ். ஆறுமுகம், கே. குமார், ஏ.கே.ஆனந்த், பி.என்.ஜோதி, டி. சீனிவாசன், இளையபெருமாள், பி. முனுசாமி, எஸ் .கே பாலாஜி, தி. ரேவதி தியாகராஜன், பி. வால்டர், அன்பு கார்த்திகேயன், பி. பிரபாகரன், ஜி .எம்.பாலாஜி, கே. தேவேந்திரன், கே. தினேஷ், சு.வெங்கடேஷ் ஆர். சங்கர், எஸ். அசோக், எஸ். சத்யா, எஸ் .சுனிதா, பி. சம்பத் ,எம். சங்குமார், ஆர் .சுரேஷ்குமார், கே. ராஜாசேகர்,பி .பிரகாஷ், எல் .பாலாஜி ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர். இவ்விழாவில் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர், மா .சுப்பிரமணியன், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் தமிழ் கேள்வி கலைஞர் ஆர்மி ஒருங்கிணைப்பாளர் செந்தில்வேல், கு. சுருதி, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் .தமிழச்சி தங்கபாண்டியன் ,மத்திய பகுதி கழகச் செயலாளர், சோழிங்க நல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த் ரமேஷ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ. எம். வி. பிரபாகர் ராஜா எம். எல். ஏ. ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கிய சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியில் பாலவாக்கம் க. சோமு, எஸ். குணசேகரன், பாலவாக்கம் த. விஸ்வநாதன், பாலவாக்கம் மு. மனோகரன், வாசுகி பாண்டியன், வேளச்சேரி எஸ். பாஸ்கரன், பெருங்குடி எஸ் .வி.ரவிச்சந்திரன், ஜி. வெங்கடேசன், எஸ். சங்கீதா பாரதிராஜன், எம். கே. ஏழுமலை, மேடவாக்கம் ப. ரவி, மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் எஸ். பொன்னுவேல் தா.பஷீர் ஆ. அரிகிருஷ்ணன், சி. பிரதீப், ரத்னா லோகேஸ்வரன், ஜே. இ. பாண்டியன், பா. அருண்குமார், எம். பார்த்திபன், என். அனிஷ், த. விஜயபாலன் கி. ஸ்டாலின் மொழி, பகுதி கலக செயலாளர்கள்: எம். கிருஷ்ணமூர்த்தி, இரா. துரை ராஜ், நொளம்பூர் வே ராஜன், கே .கண்ணன், மு .ராசா, துரை கபிலன், அரிமா சு. சேகர் ,அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி மற்றும் தலைமை பொது குழு உறுப்பினர்கள்: சோழிங்க நல்லூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள் மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியின் இறுதியில் பி. ரவி, ஆர். குமார், த. செல்வின், அலை ஓசை அ.ரகு, எஸ். மணி அ.பிரபு ஆகியோர் நன்றி கூறினர்.

## தேனி மாவட்டம் மாவட்ட குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை மூலம் நிதியுதவி பெற்றவர்கள் நன்றி

தேனி, டிச.19

தேனி மாவட்டத்தில் பெற்றோரை இழந்த குழந்தைகள் படிக்க சமூக பொறுப்பு (சிஷிஸி) நிதியிலிருந்து நிதியுதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், தேனி மாவட்டத்தில் பெறப்பட்ட 1440 விண்ணப்பங்களில் 700 விண்ணப்பங்கள் கள ஆய்வு செய்யப்பட்டு, 255 விண்ணப்பங்கள் 2024 25 ஆம் ஆண்டிற்கு தேர்வு செய்யப்பட்டு ரூ.15.75 இலட்சம் மதிப்பிலான நிதியுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி.ஷஜீவனா, வழங்கினார்.



அதிக எண்ணிக்கையில் நிதி ஆதரவு கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்ததால், கடந்த 08.09.2023 அன்று ஏற்கனவே பயன்பெற்றுவரும் பயனாளிகள் 41 குழந்தைகளை தொடர்ந்து மேலும் பல குழந்தைகள் பயன்பெற வேண்டி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு மாவட்ட ஆட்சித்லைவர் அவர்களின் மூலம் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் இயக்குநர், அவர்களுக்கு நேர்முகக்கடிதம் அனுப்பப்பபட்டது.

மேலும், நிதி ஆதரவு கோரி விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் நிதிச் சூழலை நிவர்த்தி செய்யும் பொருட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தேனி மாவட்டத்தில் உள்ள பெரு வணிக நிறுவனங்களின் கூட்டாண்மை சமூக பொறுப்பு (சிஷிஸி) நிதியிலிருந்து நிதி திரட்டிட முதல்நிலை அரசு அலுவலர்களிடம் ஆலோசனை மேற்கொண்டு நிதி திரட்டிட திட்டமிடப்பட்டது.

அதன்படி பெரு வணிக நிறுவனங்களிடமிருந்து கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதி திரட்டிட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டு, வணிக நிறுவனங்களிடமிருந்து கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதியின் (CSR Fund) மூலம் நிதி பெறப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேரடி கண்காணிப்பில் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அவர்களின் மேற்ப்பார்வையில் இயங்கும் CSR Fund வங்கி கணக்கில் வரவுவைக்கப்பட்டது.

அதன்படி, தனியார் நிதி ஆதரவுத் திட்டத்தில் பெற்றோரில் ஒருவரை இழந்த/ இருவரையும் இழந்த/மாற்றுத் திறனாளி பெற்றோரின் குழந்தைகள்/ பெற்றோரின் இருவர் ஆதரவின்றி உள்ள குழந்தைகள்/ஒற்றை பெற்றோருடன் உள்ள குழந்தைகள்/ சிறை கைதிகளாக உள்ள பெற்றோரின் குழந்தைகள்/ பெற்றோரில் ஒருவரை இழந்து ஆதரவின்றி உள்ள குழந்தைகள் என 255 குழந்தைகளுக்கு ரூ.15.75 இலட்சம் மதிப்பிலான நிதியுதயினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி . ஷஜீவனா, , வழங்கினார்கள்.

இந்நிறைந்த மனம் நிகழ்வில் நிதியுதவி பெற்ற பயனாளி சுபத்ரா தெரிவித்ததாவது,

எனது பெயர் சுபத்ரா, எனது மகன் தமிழரசு, டி.பொம்மி நாயக்கன்பட்டி அரசுப்பள்ளியில் 7 ஆம் வகுப்பு படித்து வருகிறான்.

இத்திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறும் நிதியின் மூலம் குழந்தைகளின் கல்விக்கு தேவையான உதவிகளை பூர்த்தி செய்ய பேருதவியாக இருக்கும். மேலும் ஒரு குடும்பத்தில் வருமானம் ஈட்டும் குடும்பத்தலைவர் இல்லாத போது ஒற்றைபெற்றோராக குழந்தைகளை வளர்ப்பத்தில் உள்ள பொருளாதார சிரமங்களை இந்நிதியின் மூலம் நிவர்த்திசெய்ய முடியும், மேலும் இந்நிதியுதவி வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு எங்களது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.



தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே வடுகபட்டி பேரூராட்சி பகுதிகளில் செயற்பொறியாளர் ராஜாராம் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி உட்பட்ட வேலைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது பேரூராட்சி மன்ற தலைவர் நடேசன்,இளநிலை உதவியாளர் முத்துகிருஷ்ணன், அரசு ஒப்பந்ததாரர்கள் சதீஷ், லோகேஷ் மற்றும் மூர்த்தி உட்பட பேரூராட்சி பணியாளர்கள் கலந்து பலர் கொண்டனர்.

# கன்னியாகுமரி மாவட்டத்தில் 62,976 மாணவ மாணவிகளுக்கு மதிய உணவுடன் தினசரி முட்டை வழங்கப்படுகிறது! ஆட்சியர் தகவல்

கன்னியாகுமரி, டிச.19

கன்னியாகுமரி மாவட்டத்தில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத்திட்டத்தில் 664 அரசு, அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் மற்றும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 62,976 மாணவ மாணவிகளுக்கு மதிய உணவுடன் தினசரி முட்டை வழங்கப்படுகிறது.

விநியோகஸ்தகர் மூலம் வாரம் இரண்டு முறை பள்ளிகளுக்கு முட்டை வழங்கப்படுகிறது. ஒரு மாதத்திற்கு சராசரியாக 13,85,032 முட்டைகள் வழங்கப் படுகிறது. முட்டைகள் எளிதில் உடைந்து அழுகக்கூடியது என்பதால் சம்பந்தப்பட்ட அமைப் பாளர்களை முட்டை களை பரிசோதனை செய்த பின்னரே பெற்றிட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து அமைப்பாளர்களும் அவ்வாறே



முட்டைகளை பரிசோதனை செய்த பின்னரே அவித்து பள்ளிக்குழந்தைகளுக்கு வழங்குகின்றனர்.

உடைந்த மற்றும் அழுகிய முட்டைகள் இருப்பது தெரிய வந்தால் உடனடியாக புதிய முட்டைகள் மாற்றி வழங்கப் படுகிறது. சமைக்கப்படும் உணவுகள் தினசரி ஆசிரியர்கள் மற்றும் சத்துணவு பணியா ளர்கள் மூலம் சுவை பார்த்த பின்னரே பள்ளி குழந்தை களுக்கு வழங்கப்படுகிறது.

கடந்த 16.12.2024 அன்று குழித்துறை பெண்கள் நடு நிலைப்பள்ளிக்கு வழங்கப் பட்ட 197 முட்டைகளில் 5 முட்டைகள் உடைந்தும்/ அழுகிய முட்டைகளும் மற்றும் குழித்துறை கிராம தொடக்கப் பள்ளிகளில் பெறப்பட்ட 96 முட்டைகளில் 1 உடைந்தும்/ அழுகிய நிலையில் இருந்த விபரம் தெரிந்த உடன் விநியோ கஸ்தர் மூலம் புதிய முட்டைகள் மாற்றி வழங்கப்பட்டுள்ளது. உடைந்த மற்றும் அழுகிய முட்டைகள் எதுவும் பள்ளி குழந்தைகளுக்கு வழங்கப்பட வில்லை. கெட்டுப்போன முட் டைகள் உடனடியாக அழிக்கப் பட்டது.

அனைத்து பள்ளி மாணவ மாணவியர்களுக்கு உரிய ஊட்டச்சத்து பெறுவதற்காகவே முட்டை வழங்கப்படுகிறது. மேலும், இந்த திட்டம் நீண்ட காலங்களாக செயல் படுத்தப்பட்டுவருகிறது. கெட்டுப் போன முட்டைகள் குழந்தை களுக்கு எப்போதுமே வழங்கப் பட்டதில்லை. அரசுக்கு களங்கம் ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் பொதுமக்கள் மத்தியில் பொய்யான தகவலை பரப்பி பெற்றோர்களுக்கும், பள்ளிக்குழந்தைகளுக்கும் அச்சம் ஏற்படும் வகையில் ஊடகங்களில் தகவல் வெளி யானது. வெளியானதை தொடர்ந்து துறை அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு, தக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

இவ்வாறு மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, தனது செய்திக் குறிப்பில் தெரிவித்தார்.

# ஆண்டிபட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நெறிவழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்

தேனி.டிச.19

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில் தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.ஷஜீவனா, தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் பேசியதாவது,

தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழி காட்டும் மையம் மூலம் பதிவு புதுப்பித்தல், பரிந்துரை, வேலை வாய்ப்பு இல்லாதோர் உதவித்தொகை வழங்கும் திட்டம், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகைப் பணிகள், வேலை நிலவர தகவல் பணிகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், வேலைவாய்ப்பு மையத்தில் செயல்படும் தன்னார்வ பயிலும் வட்டம் மூலம் ஒன்றிய அரசு/ மாநில அரசு /ரயில்வே தேர்வு வாரியம்/ வங்கிப்பணியாளர் தேர்வு வாரியம் உள்ளிட்ட பல்வேறு தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு மாதிரி தேர்வு மற்றும் மாதிரி நேர்காணல்கள் நடத்தப் பட்டு வருகிறது. போட்டி தேர்வுகளுக்கு தயாராகும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறையும் உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2022 ஆம் ஆண்டு கல்வி தொலைக்காட்சியில் போட்டிதேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் துவக்கப் பட்டது. மேலும் ஊக்க உரைகள், முந்தைய ஆண்டு வினாத்தாள்கள் பற்றிய கலந்துரையாடல்கள் மற்றும் நடப்பு நிகழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு செய்யப்படுகின்றன.

மேலும், தனியார் துறை யில் வேலை தேடும் இளைஞர் களுக்காக சிறப்பு தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்முகாம்களில் கலந்து கொள்ளும் வேலைதேடும் இளைஞர்கள் தங்கள் கல்வித் தகுதி மற்றும் திறமைக்கேற்ப வேலைவாய்ப்புகளை வெளி நாடுகளிலும் பெற முடியும் இன்றைய காலக்கட்டங்களில் இளைஞர்கள் அரசு வேலையை மட்டும் எதிர்பார்க்காமல், தொழில்முனைவோராக உருவாக தேவையான அனைத்துப் பயிற்சிகளும் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையை தங்களுக்கு ஏற்ப அமைத்துக்கொள்ள வாய்ப்புகள் ஏராளமாக உள்ளது. அதனை சிறந்த முறையில் பயன்படுத்தி முன்னேற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

முன்னதாக, கருத்தரங்கில் சமுதாய முன்னேற்றத்தில் எனது பங்களிப்பு என்ற தலைப் பில் கல்லூரி மாணவ/மாணவியர் களுக்கு நடத்தப்பட்ட பேச்சுப் பேட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும், சென் னையில் நடைபெற்ற மாநில அளவிலான கட்டுரைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற மாணவிக்கு பாராட்டு களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்கள். அதனைத்தொடர்ந்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய கையேட்டினை மாவட்ட ஆட்சித்தலைவர் வெளி யிட்டார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட சமூக நல அலுவலர் சியாமளா தேவி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ராமபிரபா, துணை ஆட்சியர் (பயிற்சி) .கே.டினு அரவிந்த், கல்லூரி முதல்வர் த.சுஜாதா மற்றும் மாணவ, மாணவியர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.111 கோடி மதிப்பீட்டில் புதிதாக 10 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை திறந்து வைத்த அமைச்சர்

ராமநாதபுரம், டிச.19

இராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் மூலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் திறப்பு விழா நிகழ்ச்சி நடை பெற்றது.





இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்,, அவர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் பா.விஷ்ணு சந்திரன்,, அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட் டுத் துறை செயலாளர் கொ.வீரராக வராவ்,, அவர்கள் தலைமை வகித்தார். தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் அவர்கள் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தை குத்து விளக்கேற்றி வைத்து திறந்து வைத்து பேசுகையில்,

புதிதாக துவங்கப்பட்ட அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் இன்று தொழிற் பயிற்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் 90 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் இருந்து வந்த நிலையில் 3 ஆண்டுகளில் மட்டும் புதிதாக 23 தொழிற் பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த காலங்களை விட அதி நுட்ப தொழில்நுட்பங்களை இயக்கும் வகையில் புதிய வகையான கல்விகளை கற்று பயன் பெறும் வகையில் 4.0 தொழில் நுட்ப கல்வி 71 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை தமிழ்நாடு முதலமைச்சர் உத்தர விற்கிணங்க செயல்படுத்தப் பட்டுள்ளது. தொடர்ந்து அனைத்து அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களிலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க 4.0 தொழில் நுட்ப கல்வி செயல் படுத்தப்படும்.

இத்தகையான கல்வியின் மூலம் அரசினர் தொழிற் பயிற்சியில் படிக்கும் மாணவ, மாணவிகள் ஒவ்வொரு ஆண்டும் 90மு பேர் பணிக்கு செல்கிறார்கள். அதற்கு காரணம் தமிழ்நாடு முதலமைசர் அவர்களின் சிறப்பு வாய்ந்த திட்டங்களான நான் முதல்வன் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம் ஆகும். அதிலும் குறிப்பாக புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டத்தில் ரூ.1000/ வழங்குவதுபோல் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் படிக்கும் மாணவ, மாணவி களுக்கு கூடுதலாக கல்வி உதவி தொகை ரூ.79/ வீதம் வழங்கப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலால் 230 மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு அதன் மூலம் 2,26,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் பெற்றுக் கொடுக் கப்பட்டுள்ளது என்பது குறிப் பிடத்தக்கதாகும். அதுமட்டு மின்றி திறன் மேம்பாட்டு பயிற்சி, விலையில்லா சைக்கிள் போன்ற திட்டங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொருவரும் வெற்றி பெற கடுமையாக உழைக்க வேண்டும். அதே போல் ஒவ்வொரு மாணவ னும் சாதனையாளராக வர வேண்டுமானால் முயற்சி என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். அந்த முயற்சி ஒவ் வொருவருக்கும் இருந்தால் வெற்றி நிச்சயம் கிடைக்கும். எனவே நல்லொழுக்கத்துடன் படித்து அரசு திட்டங்களை பெற்று பயன்பெற்றிட வேண்டு மென தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இராமநாத புரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் அவர்கள், பரமக்குடி சார் ஆட்சியர் செல்வி.அபிலாஷா கௌர்,, அவர்கள், மண்டல பயிற்சி இணை இயக்குநர் ஆர்.மகேஸ்வரன் அவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் வி.வேலுச்சாமி அவர்கள், கமுதி ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் தமிழ் செல்வி போஸ் அவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப் பினர்கள் வாசுதேவன் அவர்கள், சசிக் குமார் அவர்கள், அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல் வர்கள் ஹரிகுமார் அவர்கள், வாழைஆனந்தம் அவர்கள், பாலைய்யா அவர்கள், கமுதி வட்டாட்சியர் காதர் மொய்தீன் அவர்கள், கமுதி ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் சித்திரா தேவி அய்யனார் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




தமிழகத்தில் எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் விதமாக ஒவ்வொரு வாக்குச்சாவடிகளுக்கும் ஒன்பது பேர் கொண்ட புதிதாக கிளைக் கழகம் அமைப்பதற்கான ஆலோசனை கூட்டம் மதுரை புறநகர் மேற்கு மாவட்டம் மேற்கு தெற்கு ஒன்றிய கழகம் சார்பில் சமயநல்லூரில் நடைபெற்றது கூட்டத்தில் கலந்துகொண்டு முன்னாள் அமைச்சர் ஆர் பி உதயகுமார் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.



திருச்சி மாவட்டம் திருவரம்பூர் தாலுகா அய்யம்பட்டியில் மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் நிறுவனத் தலைவர் ராஜேஷ் இன் ஆலோசனையின் படி கிறிஸ்மஸ் முன்னிட்டு அமைப்பின் மாநில துணை ஆலோசகர் பெஞ்சமின் அய்யம்பட்டியில் உள்ள முதியோருக்கு சில உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன இதில் அமைப்பின் நிறுவன பொதுச் செயலாளர் ஆதிலெட்சுமி மாநில ஆலோசகர் ராமன் மாநில துணை ஆலோசகர் பெஞ்சமின் மாநில மகளிர் அணி தலைவர் சுபா திருச்சி மாவட்ட இளைஞரணி தலைவர் ராஜசேகர் திருச்சி மாவட்ட செயலாளர் திலகவதி , மாவட்ட இளைஞர் அணி செயலாளர் ராஜா திருச்சி மாவட்டம் மகளிர் அணி துணைத் தலைவர் காந்திமதி திருச்சி மாவட்டம் மகளிர் அணி செயலாளர் ரேவதி திருச்சி மாவட்டம் மகளிர் அணி துணைச் செயலாளர் யாஸ்மின் கலந்து கொண்டு உதவி வழங்கினார்கள்.

# தேனி நாடார் சரசுவதி கலை அறிவியல் கல்லூரியில் பன்னாட்டுக் கருத்தரங்கம்






பெரியகுளம் டிச.19

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே வடபுதுபட்டியில் உள்ள தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை, நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை சார்பாக 'தொல்குடி மற்றும் புலம்பெயர் மக்களின் வாழ்வியல் விழுமியங்கள்' என்ற தலைப்பில் இரண்டு நாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது.

தமிழ்த்துறையினைச் சார்ந்த 116 மாணவியர்கள் மற்றும் பிற துறையைச் சார்ந்த 184 என 300 மாணவியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

தொல்குடி மக்கள் புழங்குடி பொருள் கண்காட்சியினை நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் செயலாளர் காசிபிரபு திறந்து வைத்தார். இக்கண்காட்சியில் தொல்தமிழர் பயன்படுத்திய ஆயுதங்கள், பெண்களின் அணிகலன்கள்,தமிழர்களின் உணவுமுறை, முதலா னவை காட்சிக்கு வைக்கப்பட் டிருந்ததினை அனைவரும் அதனை கண்டு களித்தனர். கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ம.தேவகி வரவேற்புரை ஆற்றினார்.

தேனிமேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை தலைவர் ராஜமோகன் தலைமையுரை ஆற்றினார். உபதலைவர் கணேஷ், பொதுசெயலாளர் ஆனந்தவேல் மற்றும் பொருளாளர் பழனியப்பன் முன்னிலையுரை ஆற்றியாற் றினர். இணைச்செயலாளர்கள் அருண், செண்பகராஜன், மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் சித்ரா, அகடமிக் டீன் முனைவர் கோமதி, முனைவர் சரண்யா ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.தொல்குடி மற்றும் புலம்பெயர் மக்களின் வாழ் வியல் விழுமியங்கள் என்ற பொருண்மையிலான் ஆய்வுக் கோவையினை வெளியிட்டனர்.

முதல்நாள் நிகழ்வாக ஜெர்மன் பன்னாட்டு அமைப்பு தமிழ் மரபு அறக்கட்டளையின் தலைவர் முனைவர் சுபாஷிணி, மதுரை முன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியின் உதவி பேராசிரியர் ரஞ்சித்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இரண்டாம் நாள் நிகழ்வாக கப்பலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கரு.முருகேசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு "தொல்நகர் கீழடி" என்ற தலைப்பில் கருத் துரையாற்றினார்.நிகழ்ச்சியின் முடிவில் தமிழ்த்துறை ஒருங் கிணைங்கிணைப்பாளர் மகேஸ்வரி நன்றி கூறினார்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161